## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் - திரு.மு. கந்தன் என்பவர் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7)துறை

அரசாணை (ப) எண். 170

நாள்: 05.09.2022
சுபகிருது வருடம்,
ஆவணி மாதம் 20 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2053,

ஆதி-திராவிடர் நல இயக்குநர் அலுவலகம்
22 SEP 2022
சென்னை-5

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ6/ 24554/2019, நாள்.09.06.2022.

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், பாலூர், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் பதிவுறு எழுத்தராகப் பணிபுரிந்து வந்த போது 03.03.2019 அன்று காலமான திரு.சீ.மூர்த்தி என்பவரது மகன் திரு.மூ.கந்தன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 31.01.2022 முற்பகல் முதல் ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகின்றார் அன்னாரது தட்டச்சர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, அதனடிப்படையில், கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் பணிபுரிந்து வரும், திரு.மு.கந்தன் என்பவர் தட்டச்சர் பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 31.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.மு.கந்தன், தட்டச்சர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா. எண். 15056/ட்டி1/2022, நாள்.16.08.2022 மற்றும் அ.சா.எண். 2994987/ ஜி2/ 2022, நாள்.24.08.2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ,ஆதி திராவிடர் நலம் , சென்னை-5
திரு.மு.கந்தன், ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை-5.
(ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை - 18 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

மே.கு எண். இ6/24554/2019, நாள். 09.2022.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தனியருக்கு சார்பு செய்யும் பொருட்டு

பிரிவு அலுவலர்

PERSONAL ASSISTANT
O/o. The Director of Adi Dravidar
Welfare Department,
Chennai - 5.

5/5

பெறுநர்: திரு மு. கந்தன்,
தட்டச்சர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சென்னை - 05.